# அறிவார்ந்து இருங்கள்

# மின்னிலக்க அடித்தடம் (டிஜிட்டல் ஃபூட்பிரிண்ட்)

நீங்கள் உருவாக்குவது, பதிவிடுவது மற்றும் பகிர்வது போன்ற உங்களின் இணையவழி நடவடிக்கைகளின் எல்லா தடயங்களின் பதிவு.



நீங்கள் ஒவ்வொரு முறையும் இணையத்தில் எதையேனும் பதிவிடும்போது, எதையாவது தேடும்போது அல்லது ஒரு இணையத்தளத்திலிருந்து நினைவிகளை (குக்கீ) ஏற்றுக்கொள்ளும் போது நீங்கள் தகவல்களின் மின்னிலக்கத் தடத்தை உருவாக்குகிறீர்கள். உங்களின் இன்டர்நெட் புரோட்டோகால்(IP) முகவரி, விருப்பங்கள், புகைப்படங்கள் மற்றும் பிற தனிப்பட்ட தகவல்களை உங்களை அறியாமலேயே நீங்கள் வெளிப்படுத்தலாம்.

## நான் எதற்காக இதைத் தெரிந்துகொள்ள வேண்டும்?









- கோவிட்-19 கிருமித்தொற்று பரவலின் போது நாம் நம்மை மகிழ்விக்கவும், மளிகைப் பொருட்கள் மற்றும் உணவுகளை வாங்கவும், அதோடு குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் சக ஊழியர்களுடன் தொடர்பு கொள்ளவும் இணையத்தில் அதிக நேரம் செலவிடுகிறோம்.
- இந்தக் காலகட்டத்தில் நாம் பரிமாறிக்கொள்ளும் மின்னிலக்கத் தகவல்களை இணையக் குற்றவாளிகள் தவறாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- இது உங்கள் நற்பெயர், உறவுமுறைகள் மற்றும் வேலை வாய்ப்புகளில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தலாம்.முதலாளிகள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சட்ட அமலாக்க அதிகாரிகள் உங்கள் மின்னிலக்க அடித்தடத்தை உங்களின் பண்பு மதிப்பீட்டிற்கான அடிப்படையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- நீங்கள் இணையத்தில் இடுகையிடும் எந்த விஷயமும் உங்கள் மின்னிலக்க அடித்தடத்தின் ஒரு பகுதியாக மாறுகிறது, மேலும் அதை அகற்றுவது கடினமாகலாம். நீங்கள் அதை நெருங்கிய அல்லது தனிப்பட்ட குழுவில் பகிர்வதற்கு நோக்கம் கொண்டிருந்தாலும் கூட, மற்றவர்கள் உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பொதுவில் பகிரக்கூடும்.

#அறிவார்ந்து இருங்கள்

நீங்கள் பகிர்ந்துகொள்ளும் தகவல்கள் குறித்து விழிப்புடன் இருங்கள்

1 CLICK AWAY Be Safe · Be Smart · Be Kind

MEDIA LITERACY COUNCIL

ஆதரவளித்தவர்:

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

SINDA Singapore Indian Development Association

இவரது ஆதரவுடன்:

SG:D | GET READY!

# எனது மின்னிலக்க அடித்தடத்தை நான் எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளலாம்?



## இணையத்தில் நீங்கள் பாதுகாப்பான மின்னிலக்க அடித்தடப் பழக்க வழக்கங்களைப் கடைப்பிடிக்க சில வழிகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன!

- முதலில், உங்கள் பெயரை ஒரு தேடுபொறியில் உள்ளிட்டு முடிவுகளை மதிப்பாய்வு செய்வதன் மூலம் உங்கள் மின்னிலக்க அடித்தடம் பற்றி நீங்கள் மேலும் அறிந்துகொள்ளலாம்.
- உங்களின் தனிப்பட்ட தகவல்களை வெளிப்படுத்தும் இணையவழி உள்ளடக்கம் அல்லது பதிவுகளை அகற்றுங்கள்.







- சமூக ஊடகத் தளங்களிலும் உங்கள் செயலிகளிலும் உங்கள் அமைப்புகளைத் 'தனிப்பட்டது' என்ற நிலைக்கு மாற்றவும்.
- சமூக ஊடகத் தளங்கள் தனது தனியுரிமைக் கொள்கைகளை மாற்றக்கூடும் என்பதால், உங்கள் அமைப்புகளைத் தவறாமல் சரிபார்க்கவும்.
- உங்கள் தொலைபேசி மற்றும் சமூக ஊடகங்களில் புவி-குறியிடுதல் (ஜியோ-டேஃகிங்) அல்லது இருப்பிட அமைப்புகளின் இயக்கத்தை நிறுத்துங்கள் ஏனெனில் இவை உங்கள் நடமாட்டங்களையும் வழக்கமான வழித்தடங்களையும் பின்தொடர்கின்றன.

- உங்களின் தொலைபேசி எண், முகவரி மற்றும் பிறந்த தேதி போன்ற முக்கியத் தகவல்களை இணையத்தில் பகிர்ந்துகொள்ளாதீர்கள்.
- தனிப்பட்ட தகவல்களை அதிகப்படியாகப் பகிர்ந்துகொள்வதைத் தவிர்க்கவும். உங்கள் தனிப்பட்ட உரைகள், புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் தனிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைத்திருந்தாலும் அவை பகிர்ந்துகொள்ளப்படலாம் அல்லது கசிய விடப்படலாம்.




**#அறிவார்ந்து இருங்கள்**

**நீங்கள் பகிர்ந்துகொள்ளும் தகவல்கள் குறித்து விழிப்புடன் இருங்கள்**

1 CLICK AWAY — Be Safe · Be Smart · Be Kind

MEDIA LITERACY COUNCIL

ஆதரவளித்தவர்:

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY

SINDA Singapore Indian Development Association

இவரது ஆதரவுடன்:

SG:D | GET READY!

# இணையத்தில் நீங்கள் பாதுகாப்பான மின்னிலக்க அடித்தடப் பழக்கங்களைப் கடைப்பிடிப்பதற்கான சில வழிகள்!

- நீங்கள் எதையேனும் பதிவிடுவதற்கு முன்னர் எப்பொழுதும் யோசியுங்கள். இணையத்தில் எதையேனும் பதிவிட்டதும், அதை அகற்றுவது கடினமாகும், மேலும் அது பல ஆண்டுகளுக்குப் பிறகும் மீண்டும் தோன்றக்கூடும்.






- மற்றவர்களுக்கு உதவக்கூடிய விஷயங்களை மட்டும் பதிவிடுவதன் மூலம் நேர்மறையான மின்னிலக்க அடித்தடத்தை உருவாக்குங்கள்.

## எனது பிள்ளையின் மின்னிலக்க அடித்தடத்தை நான் எவ்வாறு பாதுகாக்கலாம்?

- பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளைப் பற்றி இணையத்தில் பகிரும் எதையும் அவர்களின் மின்னிலக்க அடித்தடத்தில் சேர்கிறது என்பதை நினைவில் கொள்க.
- குற்றவாளிகள் உங்கள் பிள்ளையின் முழுப்பெயர், பள்ளி, பொழுதுபோக்குகள் அல்லது அவர் இருக்கும் இடத்தை அறிந்துகொள்வதற்கு, பதிவுகள், புகைப்படங்கள் மற்றும் காணொளிகளிலிருந்து சேகரிக்கப்படும் விவரங்களை ஒன்றாக இணைக்கலாம்.
- தனியுரிமை அமைப்புகள் அமைக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்யுங்கள், இதன் மூலம் உங்கள் இணைய வலையமைப்பில் மிக நெருக்கமான நபர்கள் மட்டுமே உங்கள் பதிவுகளைக் காண முடியும்.
- உங்கள் பிள்ளைகள் இணையத்தில் பாதுகாப்பாக இருப்பதற்கு, அடிப்படை விதிகளை நடைமுறைப்படுத்தி, அவர்களுக்குத் தேவையான அறிவை வழங்க வேண்டும். தங்களை எவ்வாறு திறம்பட பாதுகாத்துக் கொள்வது என்று உங்கள் பிள்ளைகளுக்குத் தெரியும் என்று நீங்கள் உணரும் வரை அவர்களை சமூக ஊடகங்களில் இருந்து விலக்கி வைப்பது நல்லது. மேலும் உதவிக்குறிப்புகளுக்கு, பார்வையிடவும்:

www.betterinternet.sg/-/media/Resources/PDFs/Parents-Guides/Social-Media-Parent-Guide.pdf



**#அறிவார்ந்து இருங்கள்**

நீங்கள் பகிர்ந்துகொள்ளும் தகவல்கள் குறித்து விழிப்புடன் இருங்கள்

1CLICK AWAY
Be Safe · Be Smart · Be Kind

MEDIA LITERACY COUNCIL

ஆதரவளித்தவர்:
INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY
SINDA Singapore Indian Development Association

இவரது ஆதரவுடன்:
SG:D | GET READY!